# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1938/2 - 2015 ඔක්තෝබර් මස 26 වැනි සඳුදා - 2015.10.26

*1938/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012* (II)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2015, ஒற்றோபர் 14.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் சுறா மீன்பிடிக் கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடித்தல் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆளெவரும், அருங்காட்சியத்துக்கும், நஞ்சியல் கற்கைகளுக்கான உயிரியல் மாதிரி பெறுவதற்கெனவும் மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவும் சேகரித்தல் தவிர, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த ஏதேனும் சுறாமீனைப் பிடித்தலாகாது.

3. ஆளெவரும் -

(i) உள்நாட்டு மீன்பிடிப் படகொன்றின் மூலம் பிடிக்கப்பட்ட ஏதேனும் சுறாமீனின் துடுப்புகளை அத்தகைய உள்நாட்டு மீன்பிடிப்படகில் வைத்து அகற்றிவிடுதலும் துடுப்புகள் அகற்றப்பட்டுள்ள ஏதேனும் சுறாமீனின் இறந்த உடலை அப்புறப்படுத்துதலுமாகாது ;

(ii) அத்தகைய துடுப்புக்கள் ஏதேனும் சுறாமீனின் உடலுடன் இயற்கையாகவே இணைந்திருந்தாலொழிய, அத்தகைய சுறாமீனின் துடுப்புக்களைப் படகில் வைத்திருத்தல், கப்பலில் மாற்றியேற்றுதல் அல்லது தரையிறக்குதல் ஆகாது.

4. ஒழுங்குவிதி 2 இன் ஏற்பாடுகளுக்கமைவாக, உயிருள்ள சுறாமீன்களை குறிப்பாக இளவயதுடைய மற்றும் கருவுற்றுள்ள சுறாமீன்களை விட்டுவிடுதல் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மீன்பிடிப்படகொன்றின் சொந்தக்காரரின் அல்லது தலைவரின் கடமையாதல் வேண்டும்.

5. 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதிய 1206/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2001 ஆம் ஆண்டின் மீன்களைத் தரையிறக்குதல் (சுறாமீன் மற்றும் திருக்கை மீன் இனங்கள்) ஒழுங்குவிதிகளும் 2012 ஆம் ஆண்டு யூலை 27 ஆந் திகதிய 1768/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் திரெஷர் சுறாமீனைப் பிடித்தலைத் தடைசெய்தல் ஒழுங்குவிதிகளும் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

6. இவ்வொழுங்குவிதிகளில் "சுறாமீன்" என்பது, சுறாமீன்களின் இனங்களை உள்ளடக்கும்.

**அட்டவணை**

1. அலோபிடே குடும்பத்தின் சுறாமீன் இனங்கள்
   அலோபியஸ் வல்பினுஸ் (திரெஷர் சுறாமீன்)
   அலோபியஸ் சுபர்சிலியோசஸ் (பெரியகண் திரெஷர் சுறாமீன்)
   அலோபியஸ் பெலஜிகஸ் (பெலஜிக் திரெஷர் சுறாமீன்).

2. கார்ச்சார்ஹினஸ் லோன்ஜிமனுஸ் (சமுத்திர வெள்ளை வரிச் சுறாமீன்)

3. ரின்கொடன் டைபஸ் (மினிமுத்து சுறாமீன்).

11- 204/1

---

ச.வ.பி. 1/2012 (II)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமை வழிமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக, ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த அமரவீர,
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2015, ஒற்றோபர் 14.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் சுறா மீன்பிடிக் கடற்றொழில் முகாமைத்துவ (ஆழ் கடல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆளெவரும் அருங்காட்சியத்துக்கும், நஞ்சியல் கற்கைகளுக்கான உயிரியல் மாதிரிகளைப் பெறுவதற்கெனவும் மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவும் தவிர, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த ஏதேனும் சுறாமீனைப் பிடித்தலாகாது.

3. ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆளெவரும் -

(i) உள்நாட்டு மீன்பிடிப் படகொன்றின் மூலம் பிடிக்கப்பட்ட ஏதேனும் சுறாமீனின் துடுப்புகளை அத்தகைய உள்நாட்டு மீன்பிடிப்படகில் வைத்து அகற்றிவிடுதலும் துடுப்புகள் அகற்றப்பட்டுள்ள ஏதேனும் சுறாமீனின் இறந்த உடலை அப்புறப்படுத்துதலுமாகாது ;

(ii) அத்தகைய துடுப்புக்கள் ஏதேனும் சுறாமீனின் உடலுடன் இயற்கையாகவே இணைந்திருந்தாலொழிய, அத்தகைய சுறாமீனின் துடுப்புக்களைப் படகில் வைத்திருத்தல், கப்பலில் மாற்றியேற்றுதல் அல்லது தரையிறக்குதல் ஆகாது.

4. ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆளெவரும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த ஏதேனும் சுறாமீனை அல்லது அதன் உடலில் ஏதேனும் பாகத்தை உள்நாட்டு மீன்பிடிப்படகொன்றில் வைத்திருத்தல், கப்பலில் மாற்றியேற்றுதல், தரையிறக்குதல் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கு முனைதல் ஆகாது.

5. ஒழுங்குவிதி 2 இன் ஏற்பாடுகளுக்கமைவாக, ஆழ்கடலில் சுருக்குவலையின் மூலம் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆளெவரும், மினிமுத்து சுறாமீன் (Rhiniodon typus )அநேகமாக வாழும் இடப்பரப்புகளில் வேண்டுமென்று சுருக்குவலைகளைத் தொழிற்படுத்தலாகாது.

6. ஒழுங்குவிதி 2 இன் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வருவனவற்றைச் செய்தல் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மீன்பிடிப்படகொன்றின் சொந்தக்காரரின் அல்லது தலைவரின் கடமையாதல் வேண்டும் :-

(i) எதிர்பாராதவாறு பிடிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்ததுமான ஏதேனும் சுறாமீனைச் செயல்முறைக்குகந்த அளவுக்கு அதற்கு ஏதேனும் தீங்குவிளைவிக்காமல் கடலுக்குள் விட்டுவிடுதல் ;

(ii) எதிர்பாராதவாறு பிடிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்ததுமான சுறாமீனை விட்டுவிட்டமை பற்றி அல்லது கையாண்டமை பற்றி எண்ணிக்கை விட்டுவிட்ட இடம், பாதுகாப்பான விட்டுவிடுதலை உறுதிப்படுத்துவதற்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மீன்பிடிப் படகில் பேணப்பட்ட பேரேட்டில் பதிதல் ;

(iii) உயிருள்ள சுறாமீன்களை குறிப்பாக இளவயதுடைய மற்றும் கருவுற்றுள்ள சுறாமீன்களை விட்டுவிடுதல்.

7. 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் 17 ஆந் திகதிய 1206/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2001 ஆம் ஆண்டின் மீன்களைத் தரையிறக்குதல் (சுறாமீன் மற்றும் திருக்கைமீன் இனங்கள்) ஒழுங்குவிதிகளும் 2012 ஆம் ஆண்டு யூலை 27 ஆந் திகதிய 1768/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் திரெஷர் சுறாமீனைப் பிடித்தலைத் தடைசெய்தல் ஒழுங்குவிதிகளும் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

8. இவ்வொழுங்குவிதிகளில் "சுறாமீன்" என்பது, சுறாமீன்களின் இனங்களை உள்ளடக்கும்.

**அட்டவணை**

1. அலோபிடே குடும்பத்தின் சுறாமீன் இனங்கள்
   அலோபியஸ் வல்பினுஸ் (திரெஷர் சுறாமீன்)
   அலோபியஸ் சுபர்சிலியோசஸ் (பெரியகண் திரெஷர் சுறாமீன்)
   அலோபியஸ் பெலஜிகஸ் (பெலஜிக் திரெஷர் சுறாமீன்).

2. கார்ச்சார்ஹினஸ் லோன்ஜிமனுஸ் (சமுத்திர வெள்ளை வரிச் சுறாமீன்)

3. ரின்கொடன் டைபஸ் (மினிமுத்து சுறாமீன்).

11- 204/2